# உலகத் தமிழர்களின் எதிரி ராஜீவ்

ஆறு மாதங்கள். ராஜீவ்—ஜெயவர்த்தனே ஒப்பந்தம் கைச்சாத்திட்டு ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. ஒப்பந்தத்தின்படி வாக்களித்த எதையுமே அவர்கள் சாதிக்க முடியவில்லை. கையெழுத்தாகும் 48 மணி நேரத்தில் போர் ஓய்வு; 72 மணி நேரத்தில் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்து விடுவது; ஒரு வாரத்தில் அவர்களுக்குப் பொது மன்னிப்பு, தடுப்புக் காவல் கைதிகள் விடுதலை; ஆறு மாதத்தில் வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பு, இடைக்கால நிர்வாக அமைப்பு—எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையில் இரத்தக் களறி நிறுத்தப்படும், அமைதி நிலைநாட்டப்படும் என்று விரைவானதொரு கால அட்டவணையும் இலக்கும் நிர்ணயித்து -எல்லாம் கம்ப்யூட்டர் கணக்குப் போட்டாற்போன்று துல்லியமாகச் சொன்னார்கள்.


ஆனால் எதுவுமே நடக்கவில்லை, இந்தத் திசையில். எல்லாம் எதிர்த் திசையில் சரிந்தன. ராஜீவ்-ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை வாழ்த்தி வரவேற்றவர்கள், தாங்கிப் போற்றியவர்களிலேகூட பலர் அதன் தோல்வியை ஒப்புக் கொள்ளத் தொடங்கிவிட்டனர். ஆனால் கைச்சாத்திட்ட பாசிஸ்டுகளும் அவர்களது பாதந்தாங்கிகளும் தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லை! பாசிஸ்டுகள் ஒருபோதும் தோல்வியை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஒப்பந்தத்தை உறுதியாக அமுல்படுத்துவோம் என்று விடாப்பிடியாகக் கூறுகின்றனர். புலிகளை நிராயுதபாணிகளாக்குவதில் — புலிகளைப் பூண்டோடு ஒழிப்பதில் சற்றுத் தாமதமாகிறது—இதுவும் நாங்கள் எதிர்பார்த்ததுதான் என்று சாதிக்கிறார்கள்.

இலங்கையிலிருந்து நாளும் கேட்கும் துப்பாக்கி—வெடிகுண்டுச் சத்தங்களும் சாவுகளும் பாசிஸ்டுகளின் பகற்கனவுகளைத் தகர்க்கின்றன. 1983 ஜூலை தமிழினப் படுகொலைக்குப் பிறகு நான்கு ஆண்டுகளில் சிங்கள ராணுவம் நடத்திய தாக்குதலினால் ஏற்பட்ட சாவுகளும் அழிவுகளும் கூட 1987 ஜூலை ஒப்பந்தம் கையெழுத்தானதற்கும் பிறகு ஆறு மாதங்களில் இந்திய ராணுவம் நடத்திய தாக்குதலினால் ஏற்பட்ட சாவுகளும் அழிவுகளையும் விடக் குறைவுதான்! இந்த ஆறு மாதங்களில் ஆயிரத்துக்கும் மேலான தமிழ்—சிங்கள சிவிலியன்களும், ஏறக்குறைய 200 போராளிகளும் கொல்லப்பட்டிருக்கின்றனர். ஆயிரத்துக்கும் மேலான இந்திய இராணுவத்தினரை பாசிச ராஜீவ் கும்பல் பலி கொடுத்திருக்கிறது. இலங்கையை ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள், உள்ளூர் தலைவர்கள் முதல் பெருந்தலைவர் வரை 150 பேரை பாசிச ஜெயவர்த்தனா கும்பல் தெற்கே பலிகொடுத்திருக்கிறது. இதுவரை 600 கோடி ரூபாய் ஈழப் போருக்காக இந்திய அரசு மட்டும் செலவிட்டிருக்கிறது. இவை இந்திய—இலங்கை அதிகார பூர்வ அரசு ஆதரவு நிறுவனங்களின் செய்திகள்.

இவ்வளவு பெரிய இழப்புகள் இருப்பினும் இந்தியாவின் இலங்கை ஆக்கிரமிப்பும், ஈழப் போரும் தொடருவது ஏன்? இலங்கைத் தமிழர்களின் நலன்களுக்காகத்தானென்று பாசிச ராஜீவ் கும்பல் இங்கே பொய்ப் பிரச்சாரம் செய்கிறது. ஆனால் இலங்கையில் தற்போதைய நிலைமை என்ன?

ஒப்பந்தத்திற்கும், இந்திய ஆக்கிரமிப்புக்கும் எதிராக சிங்கள மக்களின் வெறுப்பும் கோபமும் அதிகரித்து வருவதாக இந்தியப் பத்திரிக்கைகள் கூறுகின்றன. உளவு நிறுவனங்களும் ஒப்புக் கொள்ளுகின்றன. ஆளும் ஐக்கிய
கட்சியினருக்கு எதிராக மக்
தலை முன்னணி (ஜே. வி.
தனி நபர் அழித்தொழிப்பு
வருகின்றன. ஒரு வாரத்
வி. பி.யை நசுக்குவதாகவும்
காக பச்சைப் புலிகள் படை
பதாகவும் ஜெயவர்த்தனே
போட்டார். அடுத்த வார
சைப் புலிகள் படைத் த
ஜே. ஆரின் கட்சித் த
சுட்டுக் கொல்லப்பட்டனர்.
ஆக்கிரமிப்புப் படை ஈ
தாண்டி தெற்கேயும் அ
கிறது. தேவையானால்
தான் இராணுவத்தை
போம் என்கிறார் மந்திரி
திஸ்நாயகே.

“யாழ் நகரைக் கை
தற்கான சண்டை முடிந்
ஆனால் ஈழத்துக்கான
தொடர்கிறது” என்று
தியா—இலங்கை உட்பட
நாட்டுப் பத்திரிகைகளும்
றன. வியத்நாம் போரில்
கப் படையும், ஆஃப்கான்
ரஷ்யப் படையும், கம்பூ
போரில் வியத்நாம் படை
யதைப் போல் புதை சே
தியப் படை சிக்கிக் கொ
மரபுவழி நீண்டகால கொ
போரில் ஈழப் போராளிகள்
விட்டனர். அதற்குத் தி
றும் 10 இந்திய ராணுவ
5 புலிகளும் 10 தமிழ்-சிங்க
யன்களும் பலியாவதாக செ
வருகின்றன. ஈழம் முழுவ
குறைய எப்போதும் ஊரட
தாவின் கீழ் இருக்கிறது. பு
தேடி நிராயுதபாணிகளா
என்கிற பெயரில் இந்திய—இ
இராணுவத்தினர் நடத்து
கொலைகள், சூறையாடல்,
கைகள், கற்பழிப்புகள் இல
களிடையே மேலும் மேலும்
வேசத்தைத் தூண்டி வரு



ராஜீவ் அரசின் பிராந்திய மேலாதிக்கக் கொள்கையை அண்டை நாடுகளின் பாதுகாப்புக்கானது என சித்தரிக்கும் முதலாளித்துவ பத்திரிக்கைகளின் கருத்துப் படம்.

...தச் யாழ்நகர் மாமூல் நிலைக்குத் திரும்பி விட்டதாக இந்தியாவில் ...ப்பப் பிரச்சாரம் நடக்கிறது. ...னால் எப்படிப்பட்ட மாமூல் நிலைமை தெரியுமா? இலங்கை இராணுவத்தின் உச்சபட்ச தாக்குதலின் போதுகூட தொடர்ந்து 3, 4 ...நாட்கள் அங்கு ஊரடங்கு விதிக்கப்படவில்லை. இப்போது மாலை ...முதல் காலை வரை 14 மணி நேர ...வும் தொடர்ந்து ஊரடங்கு. பெண்கள் வெளியே வரவே அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கின்றனர். அதிகாலை 8 மணிக்குப் புறப்பட்டு கடலுக்குப் போகவேண்டிய மீனவர்கள் கூட 8 மணிக்கு முன்பு வெளியே காலெடுத்து வைக்க முடியாது. மின்சார இணைப்பில்லாததால் குடிநீர்கூட கிடைப்பதில்லை. ஒரு தேக்கரண்டி பால் பவுடருக்காக இந்திய இராணுவ முகாம்களின் முன்பு மக்கள் வரிசையில் காத்துக் கிடக்கும்படி நிற்க வைக்கப்படுகிறார்கள். கடந்த ஆண்டு சிங்கள இராணுவம் ...போட்ட பொருளாதார முற்றுகையின்போதிருந்ததைவிட நிலைமை மோசமாக இருக்கிறது.

மின் இணைப்புகளும், தொலைபேசித் தகவல்களும் நிறுவப்படுவதாக இந்தியா பிரச்சாரம் செய்வது உண்மைதான்! அதாவது இந்திய இராணுவ முகாம்களுக்கு இந்த வசதிகள் செய்து தரப்படுகின்றன. இந்திய இராணுவம் ஈழத்தில் நீண்டகாலம் தங்கிவிடும் என்கிற மக்களின் சந்தேகத்தை இவை வலுப்படுத்துகின்றன. இந்திய இராணுவம் கல்வி நிலையங்களைத் திறந்து, தேர்வு பற்றிய அறிவிப்புகளை செய்தாலும் மாணவர்கள் திரும்புவதற்கான அறிகுறியே இல்லை. அரசு அலுவலகங்கள் இயங்குவதாகச் சொன்னாலும் அலுவலகக் கட்டிடங்கள் அனைத்தும் இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ்தான் உள்ளன.

யாழ் நகரின் ஒவ்வொரு தெரு முனையிலும் போர் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் பதுங்கு குழிகள் வெட்டி நிரந்தரமாக இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். நடந்தும் வாகனங்களிலும் எந்நேரமும் ரோந்து சுற்றுகின்றனர். ஏராளமான சோதனைச் சாவடிகள் நிறுவி போவோர் வருவோரின் மூட்டை முடிச்சுகளைச் சோதனையிடுகின்றனர். சொந்த நாட்டு மக்களிடம் அடையாளம் கோரி ஆக்கிரமிப்பு ராணுவம் துன்புறுத்துகிறது. பெண்கள் ஆடைகளுக்குள் ஆயுதங்களை ஒளித்து வருவதாகச் சொல்லி அவமானப்படுத்துகிறது; இந்த இழி செயலுக்கு உதவியாக இந்தியாவில் இருந்து பெண் போலீஸ் படை வந்துள்ளது.

ஆக, போரிடுவதற்கு இந்திய இராணுவம், போலீஸ் வேலை செய்வதற்கு இந்திய மத்திய ரிசர்வ் படையும் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையும், நிர்வாகத்துக்கு இந்திய சிவில் நிர்வாக அதிகாரிகள், கல்வி நிலையங்களை நடத்துவதற்கு இந்திய ஆசிரியர்கள்—நீண்டகால ஆக்கிரமிப்புக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன. எனவே 'ஒப்பந்தத்தை நிறைவேற்றுவது எமது ஒரு பகுதி, உடனடி நோக்கம்தான்; அது நிறைவேறாமல் போனால்கூட வேறு முக்கியமான நீண்டகால யுத்த தந்திர நோக்கங்கள் நிறைவேற்றப்படுகிறது' என்று இப்போது இந்திய அதிகாரிகளும் பத்திரிக்கைகளும் பகிரங்கமாகவே சொல்கின்றன.


"1971 வங்கதேசப் போரின் போது காணப்பட்ட எக்களிப்பும் நம்பிக்கையும் இந்திய இராணுவத் தலைமையகத்தில் நிலவுகிறது. இலங்கையில் இந்திய இராணுவம் இருப்பதானது சமீப ஆண்டுகளில் இந்திய அரசு தந்திரத்தின் துணிச்சலான முன் முயற்சியின் கூர் முனையாகக் கருதப்படுகிறது. இதை இந்தியாவின் பிராந்திய மற்றும் சர்வ தேசப் பேராசைகளுக்கான 'திருப்பு முனை' என்று முதிர்ந்த தூதர்களும் இராணுவ யுத்த தந்திர வல்லுநர்களும் குறிப்பிடுகிறார்கள்" (இந்தியா டுடே—டிசம்.15 '87)

"ஈழப் போருக்காக செலவிடும் ஒவ்வொரு சல்லிக்காசும், ஈழப் போரில் பலி கொடுக்கப்படும் ஒவ்வொரு இந்திய சிப்பாயின் உயிரும் அதற்கு ஈடான பயனுடையது. உடனடி நோக்கம் இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை அமுலாக்குவதாக இருக்கலாம். ஆனால் இலங்கைத் தீவில் இந்திய ராணுவம் தங்கியிருப்பதானது மேலும் பரந்து விரிந்த அரசு தந்திர சாதகமான பயன்களைத் தரக்கூடியது; அதாவது இறுதியாக, உறுதியாக இந்தப் பிராந்தியத்தின் மேல் நிலை வல்லரசாக இந்தியாவை நிலைநாட்டுவதற்கான துவக்கமாக உள்ளது."

இலங்கையில் இந்திய இராணுவ நிலைமைகள் பற்றிய இரகசிய அறிக்கைகள், பிரதமருக்குத் தரப்படும் சுருக்கமான குறிப்புகள், தந்திரோபாய அறிக்கைகள், நீண்டகால யுத்த தந்திரத் திட்டவரைவு அறிக்கைகள்—இவை அனைத்தும் அடங்கிய கோப்புகள் காட்டுவது இதைத்தான். இந்தியாவின் இலங்கைப் போர், இந்தியாவின் புதிய ஆக்கிரமிப்புக் கொள்கை ஆகியவற்றின் மூலம் இந்தியா பரந்து விரிந்த அரசு தந்திர ஆதாயங்களை அறுவடை செய்ய முடியும். இந்த கொள்கையின் முக்கிய உறுப்பாக இருப்பது இந்திய இராணுவம். எனவேதான் "1962இல் இருந்ததைப் போல இந்திய இராணுவம் இல்லை. இப்போது இந்தியாவின் ஆதிக்க நோக்கங்களுக்குப் பொருத்தமாக விளங்குகிறது" என்று இந்திய இராணுவத் தளபதி ஒருவர்

*"நாங்கள் முன்பு தப்பி ஓடி வந்ததைவிட இலங்கையில் இந்திய அமைதிப்படை வந்திருப்பதால் இப்போது நிலைமை மோசமாக இருக்கிறது."*




*"திரும்பிப் போகும்படி இப்போது என்னை நிர்ப்பந்தித்தால், எப்படிப்பட்ட வாழ்க்கைக்குத் திரும்புவேன் என்றே தெரியாது."*

பெருமையோடு சொல்லிக் கொள் கிறார்.

இந்தியாவின் ஈழப் போர் இங்கிலாந்து நடத்திய ஃபால்க்லாந்து போரைப் போன்றது. இலங்கை எந்த சூழ்நிலையிலும் வியத்நாமாகவோ, ஆஃப்கானாகவோ மாறாது என்று இராணுவ இரகசிய அறிக்கைகள் வாதிடுகின்றன. விடுதலைப் புலிகளுடனான போர் நீண்ட காலம் நீடிக்கும், இலங்கையில் காலவரையறையின்றி இந்திய இராணுவம் தங்கிவிடும் என்பதை இந்தியாவின் இரகசிய இராணுவ அறிக்கைகள் தெளிவாகவே குறிப்பிடுகின்றன பாகிஸ்தான் வங்கதேசம், பூடான் மற்றும் நேபாளம் ஆகிய அண்டை நாடுகளை மிரட்டி இந்தியாவின் பிராந்திய ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வருவதற்கான இராணுவ ரீதியான நடவடிக்கையாக இது கருதப்படுகிறது. இந்தியா—சீனா எல்லைத் தகராறில்கூட இந்தியா விரைப்பாக நடந்து கொண்டு சாதகமான பலன்களைப் பெற இது உதவும் என்று பாசிச ராஜீவ் கும்பல் கருதுகிறது. ராஜீவ் தயங்கி பின்வாங்கினால்கூட பிராந்திய விஸ்தரிப்பு மற்றும் ஆக்கிரமிப்புக் கொள்கையை மூர்க்கமாக முன் தள்ளுவது என்கிற தீர்மானத்துடன் தளபதி சுந்தர்ஜி செயல்படுகிறார்.

"இந்தியாவின் ஆதிக்கத்தை முன் தள்ளுவது' என்று எதை இந்திய அரசு தந்திர அதிகாரிகள் குறிப்பிடுகிறார்களோ அதையே 'யுத்தத்தின் மேலும் உயர்ந்த திசை வழி' என்று இராணுவ அதிகாரிகள் மாற்றுகிறார்கள். இந்தியாவினுடைய நீண்டகால நலன்களின் லாபங்களோடு ஒப்பிடும்போதுஇலங்கையில் நேரும் உயிரிழப்புகள், நிதி நட்டம், எதிரி தமிழினத்தவர் (இதனால் தமிழகததில் பாதிப்பு) ஆகிய அனைத்தும்சிறிய தியாகமாகக் கருதப்படுகிறது. புது டில்லியின் 'செல்வாக்கு மண்டலத்தை' நிறுவுவதற்குத் தரப்பட்ட மிகக் குறைந்த விலைதான் 266 (அதிகாரபூர்வ அறிவிப்பு) இந்திய இராணுவ வீரர்களின் உயிர் என்று இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன".

ஆக, பிராந்திய விஸ்தரிப்பு மற்றும் பிராந்திய மேலாதிக்கநோக்கத்திற்காகத் திட்டமிட்டு நடத்தப்பட்டதுதான் இலங்கை ஆக்கிரமிப்பும் ஈழப் போரும் என்று இராணுவ அரசு தந்திர இரகசிய ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. இலங்கைத் தமிழர்களின் நலன்களைக் காப்பதற்காகவும், அமைதியை நிலைநாட்டுவதற்காகவும்தான் ஒப்பந்தம் போடப்பட்டது, இந்திய இராணுவம் அனுப்பப்பட்டது என்று தமிழக மக்களிடம் புளுகினாலும் ஆக்கிரமிப்பு—ஆதிக்க வல்லரசுகளைப் போலவே பாசிச ராஜீவ் கும்பல் உயர் அரசியல்மட்டங்களில் வாதிடுகிறது. அதாவது இலங்கையின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் காப்பாற்றுவது இந்துமா கடல் பிராந்தியத்தின் ஸ்திரப்பாட்டுக்கு அவசியமானது; இந்திய ராணுவம் போகவில்லையானால் ஜெயவர்த்தனே பாகிஸ்தான் ராணுவத்தை அழைத்திருப்பார்; ஏற்கனவே இங்கிலாந்து, இஸ்ரேல், பாகிஸ்தான் படைகள் இலங்கை ராணுவத்துக்குப் பயிற்சி அளித்து வந்தது. அவை ஆயுதங்களையும் கூலிப் படைகளையும் அனுப்பின; யுத்த தந்திர முக்கியத்துவம் வாய்ந்த திரிகோணமலை தீவு இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது; இல்லையானால் இன்னொரு டிகாகோ கார்ஸியாவைப் போல அமெரிக்கக் கடற்படைத் தளமாக மாறியிருக்கும்.

அமெரிக்காவின் ஓய்வு மற்றும் பொழுதுபோக்குத் தளமாக திரிகோணமலை அனுமதிக்கப்பட்டிருக்குமானால் இந்தியக் கடற்படையை மும்மடங்கு விரிவாக்க வேண்டி இருக்கும். ஏற்கனவே 1971 வங்கதேசப் போரில் பாகிஸ்தான் விமானப்படை எரிபொருள் நிரப்பிக் கொள்ள இலங்கை அனுமதித்தது. இனி இவை எதுவுமே சாத்தியமில்லை; எனவே பிரதானமாக இந்தியாவின்பாதுகாப்புநலன்களுக்காகத்தான் இலங்கை நடவடிக்கைகளை மேற்கொண்டோம் என்று பகிரங்கமாகவே இந்திய அரசுத் தலைவர்கள் பேசுகிறார்கள்.

இதையே இந்தியாவி[...]
கையிலும் உள்ள போலிக்[...]
ஸ்டுகள் உட்பட 'முற்போ[...]
வாந்தியெடுக்கின்றன.
வின் இலங்கை ஒப்பந்த[...]
தியப் படையெடுப்பும் ஏ[...]
ரிக்க மற்றும் பாகிஸ்தான் [...]
முறியடிப்பதற்கான வி[...]
செய்கைகளாக அவர்கள்[...]
கின்றனர். உண்மையோ[...]
விதமாக உள்ளது. ஒப்ப[...]
யெழுத்தான ஓரிரு மணி[...]
யுத்தவெறியன் ரீகன்நேர[...]
வரவேற்றுள்ளான். "[...]
னின் யுத்த தந்திரக்கூட்[...]
ரிக்கா மதிக்கிறது; ஆன[...]
பிராந்தியத்தின் ஸ்திரப்பா[...]
ரிக்க நலன்களுக்கு அ[...]
உள்ளது. இந்தியா [...]
அதைச் சாதிக்க முடியும்"
அமெரிக்க அதிகாரிகள் க[...]
னர். சமீபத்திய ராஜீவ்–[...]
திப்புக்குப் பிறகு "இந்[...]
பிராந்திய பங்கு—பாத்[...]
அமெரிக்கா அங்கீகரித்[...]
என்று ராஜீவ் அறிவித்த[...]
புதிய இராணுவ ஆயுத [...]
தொழில்நுட்பக் கூட்டுகளை[...]
டுள்ளார். திரிகோணமலை[...]
ரிக்காவின் ஓய்வு மற்றும் [...]
போக்குத்தளமாகி விடும் [...]
குறித்து ஒப்பாரி வைத்துக்[...]
டே வளைகுடா போரில்[...]
டுள்ள அமெரிகக்க் கடற்ப[...]
தியாவின் கொச்சி துறை[...]
அதற்காகப் பயன்படுத்த[...]
கிறது ராஜீவ் கும்பல்.

கூலிக்கு ஆயுதந் தூக்கிய
கும்பலுக்கே இவ்வளவு
திமிர் இருந்தால்
கொள்கைக்கு ஆயுதந்
தூக்கிய போராளிகளுக்கு
எவ்வளவு உறுதி
இருக்கும்!

பாசிச ராஜீவ்—ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை துறைமுகங்களில் இந்திய இராணுவத்துக்கு உரிமை, திரிகோணமலை எண்ணெய் கிடங்கு—வயல்களை இந்தியா பயன்படுத்துவது, இலங்கையுடன் தொழில்—இராணுவக் கூட்டு, இலங்கையில் ஒலிபரப்பு—துறைமுகங்கள் ஆகிய வசதிகளை இந்தியாவின் எதிராளிகளுக்கு மறுப்பது ஆகிய நான்கு நலன்கள் இந்தியாவுக்குக் கிட்டும்.

இந்த உரிமைகளுக்காக இந்தியா தருவதாக ஒப்புக் கொண்ட ஈடு, விட்டுக்கொடுக்கும் உரிமைகள்—சலுகைகள். இந்தியாவுக்கு ஏற்படும் இழப்புகள் எதுவுமே இல்லை. மாறாக ஈழத்தில் "அமைதி"யை உத்திரவாதம் செய்வது, பாக்நீர் சந்தியின் மூலம் ஆயுதங்கள் போகாதவாறு கூட்டுக்

காவல் புரிவது, இலங்கை [...]
வத்துக்குப் பயிற்சி அளி[...]
அதாவது ஈழவிடுதலை [...]
கத்தை ஒழித்துக்கட்டுவ[...]
ரேலிய பாகிஸ்தானிய, பி[...]
கூலிப்படைகள் செய்து[...]
காரியங்களை இந்திய இரா[...]
மேற்கொள்ளும், கூடுதலாக[...]
திக்க உரிமையுடன்.

இந்த ஒப்பந்தத்தை
அமுல் நடத்துவ்தற்காகபு[...]
யின்றி ஆயுதங்களை ஒப்ப[...]
சரணடைய வேண்டும், [...]
யானால் படுகொலைகள் [...]
என்று பாசிச ராஜீவ் கும்பல்[...]
கிறது. இவ்வளவு அடாவ[...]
மாக நடந்து கொள்ளும் [...]
அதற்கு எப்படி வந்தது?
கொடுத்தது? 12 லட்சம் [...]
கொண்ட மிகப்பெரிய இ[...]
பலம்—ஆயுத பலம், அ[...]
திமிர் தான் காரணம்.
பலமும் ஆயுத பலமும் இ[...]
எதையும் சாதித்துவிட [...]
என்கிற அகங்காரம்.
பத்தியவாதிகளிடமிருந்து
கூலிக்கு ஆயுதந் தூக்கும் [...]
லுக்கே இவ்வளவு திமிர் இரு[...]
கொள்கைக்கு ஆயுதந் [...]
போராளிகளுக்கு அதைவிட[...]
லான உறுதி இருக்கும்!



தென்னிலங்கையிலும் இந்திய ராணுவம் நிலைக்கப்பட்டிருக்கிறது. ராணுவ வெறியாட்டம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இன்னொரு மேல்நிலை வல்லரசான ருஷ்யாவோ முந்திக்கொண்டு வந்து பாசிச ராஜீவ் கும்பலின் விஸ்தரிப்பு மற்றும் ஆக்கிரமிப்புக்கொள்கைகளை ஆதரித்தது. வங்கதேசப் போருக்கு முன்பு போடப்பட்ட இந்திய–ருஷ்யா இராணுவ ஒப்பந்தமே இந்தியாவின் பிராந்திய மேலாதிக்கத்தை அங்கீகரிப்பது தான். இரு வல்லரசுகள் தவிர பிற மேற்கு ஏகாதிபத்தியங்களின் கூட்டமைப்பான ஐரோப்பியப் பொருளாதார சமூகமும் இந்தியாவின் நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்தியா, இலங்கை போன்ற பின்தங்கிய மூன்றாம் உலகநாடுகள் மீது மேலாதிக்கம் வகிக்கவும், கொள்ளையிடவும், செல்வாக்கு மண்டலங்களாகப்பகிர்ந்துகொள்ளவும் அமெரிக்கா மற்றும்ருஷ்ய மேல்நிலை வல்லரசுகளுக்கிடையே கடும்போட்டி நிலவுவது உண்மையே. அதேசமயம் இந்தநாடுகளின் விடுதலைப் போர்களையும் சமுதாயப் புரட்சிகளையும் அடக்கி ஒடுக்குவதில் அவர்கள் கூட்டுச் சேர்ந்திருப்பதும் உண்மையே. விடுதலைப் போர்களும், புரட்சிகளும் வெடிப்பதைத்தான் "ஸ்திரத் தன்மையைக் குலைப்பதாக" அவர்கள் கருதுகிறார்கள். அவற்றை ஒடுக்குவதைத்தான் "ஸ்திரத் தன்மையைக் காப்பதாக" கருதுகிறார்கள்.

அமெரிக்காவுக்கு இஸ்ரேலும், ருஷ்யாவுக்கு வியட்நாம் மற்றும் கியூபாவும் இருப்பதைப் போல தெற்கு ஆசிய பிராந்தியத்தின் அதிரடிக் கூலிப் படையாக, பிராந்திய போலீஸ் குண்டர் படையாக, பிராந்திய ஆதிக்கப் படையாக, அதே சமயம் அமெரிக்க—ருஷ்ய வல்லரசுகளின் இளைய பங்காளியாக இந்தியா பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவே பல்வேறு ஏகாதிபத்தியங்கள் வேட்டைக்காடு—அரைக் காலனி; அது எப்படி ஏகாதிபத்தியங்களின் இளைய பங்காளி ஆக முடியும்? என்று சிலர் சந்தேகிக்கின்றனர். இதுவொன்றும் புதிதல்ல. அரைக் காலனிய அடிமை நாடாக இருந்த சீனா இரண்டாம் உலகப் போரில் நேசநாடுகளின் கூட்டாளியாக சேர்த்துக் கொள்ளப்பட்டது; போருக்குப் பிறகு ஐக்கிய நாடுகள் சபையில் வீட்டோ (ரத்து) உரிமையுடன் கூடிய இளைய பங்காளியாக சேர்த்துக் கொள்ளப்பட்டது.

ஆக, தெற்கு ஆசிய பிராந்தியத்தில் எழும் எல்லா விடுதலைப் போர்களையும், புரட்சிகளையும் ஒடுக்கி, "பிராந்திய உறுதிப்பாட்டை"க் காக்கும் வல்லமை—ஆயுத படைபலமிக்கது இந்தியா தான் என்று ஏகாதிபத்தியங்களால் நியமிக்கப்பட்ட பேட்டை ரௌடியாக இந்தியா மாறியுள்ளது. உலக ஆதிக்க வல்லரசுகளின் சர்வதேச கூட்டுச் சதிக்கு ஈழத்தமிழினம் பலி கொடுக்கப்படுகிறது. மத வெறி சர்வாதிகார அரசின் கீழிருப்பினும் அமெரிக்க, ருஷ்ய வல்லரசுகளை எதிர்ப்பதால் ஈரானை ஒடுக்குவதிலும், விடுதலைப் போரில் ஊன்றி நிற்பதால் எரிட்ரீய, கிழக்குத் திமோர் மக்களை ஒடுக்குவதிலும் அவர்கள் கூட்டுச்சேர்ந்துள்ளதைப் போலவே ஈழத்தமிழினத்தை ஒடுக்குவதிலும் கூட்டுச் சேர்ந்துள்ளார்கள். இந்தியாவின் பிராந்திய ஆதிக்கத்தை அங்கீகரித்து இந்திய இராணுவத்தைக் கொண்டே அதைச் சாதிக்கத் துணிந்துள்ளார்கள்.

இந்தியாவின் விஸ்தரிப்பு மற்றும் பிராந்திய ஆதிக்கக் கொள்கைகளை இப்போது பகிரங்கமாகவே தேசிய வெறிபிடித்த தலைவர்களும் பத்திரிக்கைகளும் நியாயப்படுத்துகின்றன. "உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு. படை பலமிக்க நாடு. தனது வல்லமையை நிலைநாட்டிக் கொள்வது இயல்புதான். சுண்டைக்காய் நாடுகளான இலங்கையும், நேபாளமும், பூட்டானும் கூட இந்தியாவை எதிர்க்கின்ற அளவு விட்டு விடுவதா? கூடாது. இந்தியா துணிச்சலான நடவடிக்கை எடுத்து தனது தகுதியை நிரூபித்துக் காட்டுவதே சரியானது" என்று பிரச்சாரம் செய்கிறார்கள்.

அரசியல் விழிப்புணர்வு பெறாத இந்தியப் பாமர மக்களில் பலரும் இந்த தேசிய வெறிக்குப் பலியாகிறார்கள். பெரும்பான்மையான உழைக்கும் மக்களோ தமது அன்றாடத் தேவைகளுக்கான போராட்டத்தில் மூழ்கி "இருக்கட்டுமே! ஈழத்தில் என்ன நடந்தால் எனக்கென்ன? இன்றைக்கு பாடுபட்டு உழைத்தால்தான் எனக்கும் என் பிள்ளை குட்டிகளுக்கும் ஒரு வேளை கஞ்சியாவது கிடைக்கும்" என்று வாழ்கிறார்கள். ஆனால் உழைக்கும் மக்கள் அப்படி ஒதுங்கியிருக்க முடியாது.

● இன்று 1000 இந்திய இராணுவத்தினரைப் பலி கொண்டிருக்கும் ஈழப்போர் இனிவரும் மாதங்களில் 5000–10,000 என்று உயரும். உழைக்கும் மக்களின் உற்றார் உறவினர்களானசாதாரண சிப்பாய்களே இந்திய ஆதிக்க வெறிக்கு காவு கொடுக்கப்படுவார்கள்.

● இதுவரையிலான போருக்குச் செலவு 600 கோடி ரூபாய் என்று அதிகாரபூர்வ செய்தி. உண்மையில் 2000 கோடியை தாண்டிவிட்டது—அதாவது நாட்டின் மிகப் பெரிய மாநிலத்தின் ஒரு ஆண்டு வரவு செலவுத் தொகை. வங்க தேசப் போரைத் தொடர்ந்து வரிச் சுமை ஏறியதைப் போல இந்திய உழைக்கும்மக்கள்மீது ஈழப்போரின் சுமை விழும். இந்திய ராணுவம் போரிடுவதால் 800 கோடி ரூபாய் மிச்சப்படுத்தி இலங்கை அரசு ஊழியருக்கு சம்பள உயர்வு கொடுக்க முடிந்ததாக ஜெயவர்த்தனே கொக்கரிக்கிறான். வியத்நாம் போர் உலகிலேயே 'பணக்கார' நாடான அமெரிக்காவைப் பொருளாதார நெருக்கடியில் தள்ளியது என்றால் ஏழைநாடான இந்தியா ஈழப்போரின் சுமையைத் தாங்குமா?

● இன்னொரு நாட்டின் இன மக்களை அடிமைப்படுத்தும் அரசு இங்கே இருக்கும் சாதாரண சிறுசிறு உரிமைகளைக்கூட விட்டு வைக்காது. போரின் விளைவாய் ஏற்படும் அரசியல் பொருளாதார நெருக்கடிகள் உழைக்கும் மக்களின்

மீதே சுமத்தப்படும். அந்தச் சமயத்தில் திடீரென்று போராட அமைப்புபலமிருக்காது! போராடத் துணிந்தாலும் பாசிச முறைகளில் ஒடுக்கவே முயலுவார்கள். அப்போதும் "தேசிய நலன்கள்", "தேசியப் பாதுகாப்பு" என்கிற பெயரில் அடக்குமுறை ஏவிவிடப்படும். நாடு யுத்தத்தில் இருக்கும் போது ஜனநாயக உரிமைகள், கூலி உயர்வு, போனசு போன்ற சலுகைகளுக்காகப் போராடுவதுகூட தேசதுரோகமாகச் சித்தரிக்கப்படும். கொடிய பாதுகாப்புச் சட்டங்கள் தாராளமாக, ஏராளமாகப் பாயும்.

எனவே, இந்திய அரசின் தேசிய வெறி, விஸ்தரிப்பு மற்றும் பிராந்திய ஆதிக்க நடவடிக்கைகளை எதிர்க்காதது மட்டுமல்ல, சகித்துக் கொண்டிருப்பதும் கூட தவறாகும். இது வெறுமனே வெளிநாட்டுக் கொள்கை மட்டுமல்ல. பாசிசத்தின் வெளிநாட்டுக் கொள்கை. வெளிநாடுகளில் இப்படிப்பட்ட விஸ்தரிப்பு மற்றும் ஆதிக்க தேசிய வெறிபிடித்த கொள்கைகள் தாம் இட்லரும் மற்றும் முஸோலினியும் உள்நாட்டு பாசிசத்தை நியாயப்படுத்தப் பயன்பட்டன.

இந்திய உழைக்கும் மக்கள் மட்டுமல்ல உலகம் முழுவதும் உள்ள இந்திய வம்சா வழியினர் அவ்வளவு பேரும் இந்திய அரசின் விஸ்தரிப்பு மற்றும்பிராந்திய ஆதிக்கத்தை எதிர்த்திட வேண்டும். ஏனெனில் ஏகாதிபத்தியத்தின் இளைய பங்காளியாக, தரகனாக இருந்து ஆதாயங்களைப் பெறுவதற்காக இந்திய வம்சா வழியினர்கள் எவரையும் பலி கொடுக்க இந்திய அரசு தயாராக உள்ளது. ஈழத் தமிழின மக்களைக் கொன்று குவிப்பதை மட்டும் வைத்துக்கொண்டு இதைச் சொல்லவில்லை.

* பர்மாவில் குடியேறி பல்லாண்டுகள் பாடுபட்டுழைத்த இந்தியர்கள், குறிப்பாக தமிழர்கள் அகதிகளாக விரட்டப்பட்டபோது அவர்களுடைய உரிமைக்காக, நட்டஈடு பெறுவதற்குக்கூட இந்திய அரசு பரிந்து வரவில்லை.

* மலேசியாவிலும் மற்றும் பிற தென்கிழக்காசிய நாடுகளிலும் வாழும் இந்திய வம்சா வழியினர் குறிப்பாகத் தமிழர்கள் குடியுரிமை மறுக்கப்பட்டு எந்நேரத்திலும் விரட்டப்படும் அபாயத்தில் வாழுகின்றனர். பெரும்பான்மையினரது இன ஒடுக்குமுறை மற்றும் கலவரங்களுக்கும் பலியாகும்போதுகூட இந்திய அரசு உதவிடவில்லை.

● அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் வாழும் இந்தியர்கள் நிற வெறியர்களால் அவமானப்படுத்தப்படுகிறார்கள்; துன்புறுத்தப்படுகிறார்கள். அமெரிக்காவின் நியூஜெர்சியில் வாழும் இந்தியப் பெண்கள் நெற்றியில் பொட்டிட்டு வந்தால் தாக்கப்படுகின்றனர்; புடவை கட்டிக் கொண்டு வந்தால்அவற்றை உருவி அவமானப்படுத்தப்படுகின்றனர். இங்கிலாந்துபோய் இறங்கும் இந்தியப் பெண்களின் கன்னிமை விமான நிலையத்திலேயே பரிசோதிக்கப்ப
திடீர் திடீரென்று வெள்ளை
வெறியர்கள் இந்தியர்களை
கின்றனர்.

● பல்லாண்டுகளாக
கைத் தேயிலைத் தோட்ட
வதியும் மலையகத் தமி
இனக் கலவரத்துக்கும், அ
பொருளாதார கலாச்சார
முறைக்கும் தொடர்ந்து
வருகிறார்கள். அவர்களது
களில் சிறிதும் அக்கரை
இந்திய அரசு 1964 சாஸ்தி
மாவோ ஒப்பந்தத்தின்
லட்சம் மலையகத் தமி
நாடற்றவர்களாக அங்கீக
எஞ்சியவர்களின் இலங்கை
யுரிமைக்கும் உத்திரவா
வில்லை.

சாஸ்திரி—சிரிமாவோ
தம் உலகம் முழுவதும் வா
திய வம்சா வழியினரை நாட
களாக்கித் துரத்துவதற்கான
னோடியாக, அருவருக்கத்த
கார ஒப்பந்தமாக இரு
ஏகாதிபத்திய எஜமான
அடகு வைத்து, ஆதாயம்
வதற்கான சரக்காகவே
வம்சாவழியினர் நடத்தப்ப
னர். இதைத் தமது வெளி
கொள்கையின் ஒரு அங்க
இந்திய அரசு கொண்டிரு
இந்த துரோகத் த
ஈடேற்றுவது இந்திய உளவு
யான "ரா"வின் மு
பொறுப்புகள் — நோக்க
ஒன்றாக வகுக்கப்பட்டுள்ள

## வெகுஜனப் படுகொலையும் கற்பழிப்பும்

ஈழத்தை ஆக்கிரமித்துள்ள இந்திய இராணுவம் வெகுஜனப் படுகொலையிலும், கற்பழிப்புகளிலும், கொள்ளையிடுவதிலும் ஈடுபட்டிருப்பதாகத் தொடர்ந்துசெய்திகள் வருகின்றன. அக்குற்றச்சாட்டுகளுக்கு இந்திய அதிகாரிகள் தரும் பதில்கள் வேடிக்கையாகவும், குற்றங்களை மேலும் உறுதிப்படுத்துவதாகவும் உள்ளன.

யாழ்ப் போரின்போது கவச வண்டிகளை ஏற்றிப் படுகொலை செய்ததை அடியோடு மறுத்தார்கள். சென்ற மாதம் இந்தியத் தளபதி அளித்த பேட்டியில் மக்கள் தாறுமாறாக ஓடியதில் ஏற்பட்ட விபத்து; ஒரு சிலர் இறந்து போனார்கள் என்றார். யாழ்ப்போர் முடிந்த உடனே சாவகச்சேரியில் விடுதலைப் புலிகளின் முகாம்மீது குண்டுவீசி அழித்ததாகச் சொன்னார்கள்; சாவகச்சேரி கடை வீதியில் குண்டு வீசி 30க்கும் மேற்பட்ட பொது மக்களைக் கொன்றதாகப் புகைப்படங்களுடன் இந்தியநிருபர்களே நிரூபித்தனர். அகதிகள் முகாம்மீது குண்டுவீசியதாக யாழ் நகரிலிருந்து தப்பி வந்தவர்கள் பேட்டியளித்தனர்.

முல்லைத் தீவிலும், மட்டக் களப்பிலும், வேறு சில இடங்களிலும் 20 பேர், 30 பேர் என்று பொது மக்கள் கொல்லப்படும் போதெல்லாம் புலிகளுடனான போரில் குறுக்கே சிக்கிக் கொண்டவர்கள் மாண்டதாக புளுகினர். கடைசியாக மட்டக்களப்பு கடை வீதியில் மூன்று போலீசாரைப் புலிகள் சுட்டுக்கொன்ற பிறகு பழி வாங்குவதற்காக தாறுமாறாகச் சுட்டு, 30 சிவிலியன்களை கொன்றனர். இது சிங்களப் போலீசின் நடவடிக்கை என்கிறது இந்திய அரசு. இந்திய இராணுவம் மற்றும் சிங்கள போலீசின் கூட்டு நடவடிக்கை என்கிறது இலங்கை அரசு.

கற்பழிப்புக் குற்றத்துக்காக 6 இந்திய இராணுவத்தினர்மீது நடவடிக்கை எடுத்திருப்பதாக யாழ் நகர நீதிபதி சொன்னதாக இந்து நிருபர் டி.பி.எஸ். ஜெயராஜ் அனுப்பிய செய்தி கூறியது. மறுநாள் நீதிபதியின் பெயரால் மறுப்பு அறிக்கை வெளியிட்டது இந்திய இராணுவம். 6 பேர்மீது கற்பழிப்பு குற்றச் சாட்டு வந்தது. குற்றஞ்
சாட்டிய பெண்கள் முன்பு
யாள அணிவகுப்பு நட
அவர்களால் அடையாளங்
முடியவில்லை. எனவே
வடிக்கைஎடுக்கப்படவில்லை
அறிக்கை கூறுகிறது. அடை
அணிவகுப்பு என்பதே
மோசடி என்பதை இந்தியா
பலருக்கும் அனுபவம் உண்டு
திலுள்ள 30000 இராணுவ
களில் யாரோ சிலரை நிறுத்தி
குற்றவாளிகளைத் தப்பிக்கவி
ஒன்றும் சிரமமில்லை.

யாழ் நகரிலிருந்த தப்பி
பெண்களே கற்பழிப்புக்
சாட்டுகளைக் கூறுகின்றனர்.
யல்கலை மாணவர்களும்
உறுதி செய்கின்றனர். "பெ
பாவாடை அணிந்து கோவி
வரக்கூடாது, சைக்கிளில்
கூடாது, அது இந்திய இரா
தினரை அவமதிப்பதாகும்"
இந்திய அதிகாரிகள் சுவ
போட்டதும், கற்பழிக்கும்
நகத்தால் கீறியோ, அடி
அடையாளம் ஏற்படுத்
என்று இந்திய அதிகா
பெண்களிடம் கூறியதும்
சாட்டுகளை உறுதிப்படு
செய்கின்றன.